

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து** : பொருளாதார விவகாரங்களில் பொறுப்புள்ளவர்களுக்காக: பொருளாதார நிபுணர்கள் எந்தவொரு ஒதுக்கும் பொருளாதாரத்தை நிராகரிக்க துணிவு பெற்றிருக்கவும், புதிய பாதைகளை திறக்க தெரிந்திருக்கவும் வேண்டுமென்று

**ஏப்ரல் மாத கரு** : கிறிஸ்துவிற்குள் மீட்கப்பட்டோம்

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஏப் 15 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | உயிர்ப்பின் 3ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | உயிர்ப்பின் 3ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | புகழாராதனை/ திருப்பலி (த) | புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |
| ஏப் 16 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| ஏப் 19 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | உயிர்ப்பின் வாரநாள் |
| ஏப் 20 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | உயிர்ப்பின் வாரநாள் |
| ஏப் 21 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித என்செலம் |
| | மாலை 4.00 | திருமணம் (ஆ) | இக்னேசியஸ் பிள்ளை பெலிக்ஸ் அம்புரோஸ்& கெமிலியா ஸ்சீத்தா S.கெமிலஸ் |
| ஏப் 22 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | உயிர்ப்பின் 4ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் 4ஆம் ஞாயிறு |
| | காலை11.00 | திருப்பலி (ம) | உயிர்ப்பின் 4ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஏப் 15 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த) |
| | மாலை 7.30 | ஆலயம் | புனித கிரகோரி பாடல்குழு (த) |
| ஏப் 16 திங் | மாலை 7.00 | பெர். மை 1-3 | தமிழ் கலாச்சாரக் குழு- புதிய உறுப்பினர்கள் வரவேற்கப்படுகின்றனர் |
| ஏப் 17 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| | மாலை 7.45 | பெர். மை 1-3 | நற்கருணை பணியாளர்கள் குழு கூட்டம் |
| | மாலை 8.00 | பெர். மை 1-2 | பஒகு-வுடன் தொகுதி தலைவர்கள் கூட்டம் |
| | மாலை 8.00 | முனிசிபல் | அருங்கொடை (த) |
| ஏப் 18 புதன் | மாலை 8.00 | பெர். மை 1-1 | அருங்கொடை (த) |
| ஏப் 19 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் & வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA (புதிதாக திருமுழுக்கு & உறுதிபூசுதல் பெற்றவர்கள்) |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | பங்கு மேய்ப்புப்பணி குழு கூட்டம் |
| ஏப் 20 வெள் | மாலை 8.00 | ஜெலாப்பாங் | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | புந்தோங் தீகா | இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| ஏப் 21 சனி | காலை 9.00 | பெர். மையம் | ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2 |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஏப் 22 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த) |
| | மாலை 7.30 | ஜெலாப்பாங் | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய குழு கூட்டம் |

<u>2018 மே மாத திருமணங்கள்</u>

மே 5 மாலை 4.00 திருமணம் (ஆ) ஜெரால்டு த/பெ ஸ்டீபன் ஜோசப் & நான்சி மரியா த/பெ வில்லியம் ஐசக்

மே 12 மாலை 4.30 திருமணம் (த) ஷெனன் ராஜ் த/பெ டேனியல் தனுவார் & எஞ்சலீனா த/பெ சின்னப்பன்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. வடக்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** வடக்கு திசை அதிச 15 ஏப் 2018 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**2. ஆலயம் கட்சி கூடம் அல்ல:** ஆலய வளாகத்திற்குள் பிரச்சாரம் செய்வதும், அல்லது எந்த அரசியல் உபகரணங்களையும் விநியோகம் செய்வதும் அனுமதிக்கப்படாது.

**3. புனித கிரகோரி பாடல்குழு (த):** புனித கிரகோரி பாடல்குழு தமிழ் திருப்பலிகளில் ஆண்டவருக்கு பணி செய்ய திறமையாக பாடுபவர்களையும் இசை கருவிகளை (Organ, Tabla, Triple Bongo) வாசிப்பவர்களையும் வரவேற்கிறது. தயவு செய்து உங்களது பெயர்களை திருத்தொண்டர் சந்தனசாமி அல்லது பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம்.

**4. தவக்கால பிரச்சார உறைகள்:** தயவு செய்து தவக்கால பிரச்சார உறைகளை 30 ஏப் 2018க்குள் பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அவைகள் பினாங்கு மறைமாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

**5. பங்கின் உத்தரவு: மறைக்கல்வி வகுப்புகள்**: புது நன்மை எடுத்த பிறகு அனைத்து குழந்தைகளும் பின்வரும் பணிக்குழுக்களில் ஏதேனும் ஒன்றை கண்டிப்பாக தேர்ந்தெடுக்க வேண்டும். அ) **பீடச்சிறுவர்கள்** (சிறுவர்கள்/ சிறுமியர்கள்) ஆ) **ஆங்கில பாடல்குழு** இ) **தமிழ் பாடல்குழு**. இது கட்டாயமானதாகும்.

**6. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** 19 மே 2018 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**7. பங்கு அகப்பக்கம்:** பங்கு அகப்பக்கத்தை மேம்படுத்தவும், பராமரிக்கவும் தகுதி வாய்ந்தவர்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளோர் தயவு செய்து பங்கு அலுவலகத்தில் பெயர்களை பதிவு செய்யவும்.

**8. பாரம்பரிய காட்சியகம்:** ஈப்போ, லூர்து பாரம்பரிய காட்சியகத்திற்கு பதிவு, ஆராய்ச்சி, மற்றும் பாராமரிப்பு செய்ய உறுப்பினர்களும், தன்னார்வலர்களும் மிகவும் தேவைப்படுகிறார்கள். ஆர்வமுள்ளோர் உங்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும்.

**9. நெறியுரை ஆலோசனை:** சகோதரி வெரோணிக்கா நெறியுரை ஆலோசனை சேவையை வழங்குகிறார். அவரது சேவையை பெற நீங்கள் பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**10. வேலைவாய்ப்பு:** மருத்துவ அனுபவம் உள்ள பராமரிப்பாளர்கள்- 2 நபர்கள் ஈப்போ, கம்போங் சீமி முதியோர் இல்லத்திற்கு உடனடியாக தேவைப்படுகின்றனர். தொடர்புக்கு: எலிசியா யோங்/ செர்லின் கோமெஸ் (05-5473252/ 05-5452449)

**11. ஆவிக்குள் அருள்வாழ்வு கருத்தரங்கு (ஆங்கிலம்):** ஆவிக்குள் அருள்வாழ்வு கருத்தரங்கு ஜூட் அந்தோணி & தந்தை. டேவிட் ரீகன் அவர்களால் வழிநடத்தப்படும். ஆங்கில அருங்கொடை செப குழு ஏற்பாடு செய்திருக்கின்றது. கருத்து: ஆண்டவரே, எங்களை புதுப்பித்தரும். **நாள்**: 12 மே (காலை 9.00 ~ மாலை 6.00) & 13 மே (காலை 10.00 ~ மாலை 5.00) **இடம்**: புனித ஜஸ்டன் & இம்பர்ட் ஆலயம். **கட்டணம்:** ரிம 30.00 (2 மதிய உணவு & 4 தேநீர் இடைவேளை) **இறுதி நாள்:** 1 மே 2018 **தொடர்புக்கு:** கபிரியேல் லீ (012-4088486)

**12. கிறிஸ்து அரசர் சிற்றாலயம்:** ஆழ்ந்த சிந்தனைக்கு பின்னர், கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிட திட்டத்தை பங்கு நிர்வாகத்திடம் ஒப்படைக்க அதிச தலைவர்கள் ஏக மனதாக ஒப்புக்கொண்டனர். கட்டிட கட்டுமானத்தைக் கண்காணிக்க ஒரு குழு அமைக்கப்படும்.

**13. குடும்ப தின உணவுச் சந்தை**: கம்போங் சீமீ முதியோர் இல்லம் குடும்ப தின உணவுச் சந்தைக்கு ஏற்பாடு செய்துள்ளது. நாள்: 29/04/18 (ஞாயிறு), காலை 9.00- மதியம் 1.00 வரை. கூப்பன் விலை ரிம 20/- ஒரு புத்தகம்.

**14. குணமளிப்பு கருத்தரங்கு தந். மேத்யு லின் SJ அவர்களால் வழிநடத்தப்படும்: நாள்**: 23 ~ 25 மே 2018 (புதன்~வெள்ளி) **நேரம்:** மாலை 7.30 - மாலை 10.00. **இடம்**: புசமாதே, ஈப்போ கார்டன். 15/4/18 ஞாயிறு 9.00மணி திருப்பலிக்கு பிறகு பங்கு மண்டபத்திற்கு அருகில் பதிவுகள் நடைபெறும்.

**15. நமது இளம் வயது பிள்ளைகளை பாதுகாத்தல்: பெற்றோர்களுக்கான அமர்வு:** இளம் வயது பிள்ளைகளின் மத்தியில் பாலியல் பலாத்காரத்தை தடுப்பது பற்றிய சொற்பொழிவு. **நாள்**: 15/4/18 (ஞா) **நேரம்:** காலை10.30- மதியம்12.00. **இடம்**: பெர். மை. **பேச்சாளர்**: திருமதி. சுமதி அண்ணாமலை & குழு.

**16. பினாங்கு மறைமாவட்ட இளைஞர் தினம் (PDYD 4): நாள்**: 16 ~ 17 ஜூன் 2018 (சனி & ஞாயிறு) **நேரம்:** மதியம் 12.00~ மதியம் 12.00 **இடம்**: கிறிஸ்து அரசர் ஆலயம், சுங்கை பட்டாணி. **ஒருமை பகிர்வு:** ரிம 50/-. **பதிவுக்கு இறுதி நாள்**: 15/4/18. **தொடர்புக்கு**: பிமஇக (04-2274851) **மின்னஞ்சல்**: pdyn@pgdiocese.org. பிமஇதி 4- க்கான நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் கொடுக்கலாம்.

**17. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி மார்ச் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **386,412.82** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **394,532.39** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**08/04/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 898.30 **காலை 9.00** - RM 1,344.95 **புந்தோங் தீகா** - RM 226.80
**மொத்தம்** - RM 2,470.05 **2018** - RM 590.00 **ஏழைகளுக்கு** - RM 2,774.10

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்